## நீலகிரி மாவட்ட வேளாண் வானிலை முன்னறிக்க மடல்

**வெளியீடு- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை. & இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்**

**தேதி 23.02.16**

சமீபகாலத்திற்கான வானிலை அறிக்கை:-

1. சமீப காலத்தில் மாவட்டத்தில் மழை பெறப்படவில்லை.
2. தட்பவெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதம் - அதிகபட்ச வெப்பநிலை 17° - 23° செ. மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 9° - 10° செ. ஆக இருந்தது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 59-89% மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-84% இருந்தது. காற்றின் வேகம் 7-21 (கிலோ.மீ./மணிக்கு).

| வானிலை குறிப்புகள் | 24.02.16 | 25.02.16 | 26.02.16 | 27.02.16 | 28.02.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச தட்ப வெப்பம் (° செ.) | 22 | 22 | 22 | 22 | 22 |
| குறைந்தபட்ச தட்ப வெப்பம் (° செ.) | 9 | 9 | 9 | 9 | 9 |
| மேகமூட்டம் (ஒக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 45 | 45 | 45 | 65 | 65 |
| குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 78 | 78 |
| காற்றின் வேகம் (கிலோ.மீ./மணிக்கு) | 9 | 9 | 9 | 9 | 9 |
| காற்றின் திசை | 110 | 110 | 110 | 110 | 110 |

**வானிலை சார்ந்த சாகுபடி குறிப்புகள்**

- மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை வராது என எதிர் பார்க்கப்படுகிறது.
- வெள்ளை பூண்டில் அறுவடையின் போது ரப்பராகும் நிகழ்வை தடுக்க, யூரியா உரத்தை தவிர்த்து அமோனியம் சல்பேட் இடவேண்டும்.
- காபி தோட்டத்தில், கீழே விழும் பழங்களை அப்புறப்படுத்தல் மற்றும் அறுவடை கால முடிவில் மீதமின்றி முழுவதுமாக அறுவடை செய்வதன் மூலம் காபி பழத்துலைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும்.
- தேயிலை தோட்டத்தில சிவப்பு சிலந்தி தாக்குதல் தென்பட்டால், வேப்பெண்ணை அல்லது ப்ராப்ர்கைட் அல்லது ப்ரபனோபாஸ் அல்லது டைகோபால் 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- கோடைகாலத்தில் கேரட், பீன்ஸ், கோஸ் மற்றும் வெள்ளை பூண்டு ஆகிய பயிர்களில் வளரும் களைகளை கட்டுப்படுத்த ப்ளுகுளோராளின் களைகொல்லி மருந்தை நடவுசெய்தவுடன் பயன்படுத்தலாம்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை